**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம்,**

**ஈரோடு.**

**STC.No. 2554/2025**

Date. 17.02.2026

பெயர்:விக்டர் செல்வராஜ்

த/பெ. தேவா பிச்சை

வழக்கு சாட்சி. பு.சா.1

(சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் பன்னிரண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் மற்றும் எதிரி என்ன தொழில் செய்து வருகிறார் என்ற விவரத்தை எனது அறிவிப்பிலும், புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியின் குடும்பத்தார் பற்றிய விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்ன குடும்ப செலவிற்காக எதிரி என்னிடம் பணம் வாங்கினார் என்றால் தொழிலுக்காக வாங்கினார். எதிரியின் செல்போன் எண் தெரியுமா என்றால் தெரியும் 9786749786 ஆகும். காசோலை திரும்பப்பட்டவுடன் மேற்படி செல்போன் எண்ணுக்கு போன் செய்தேனா என்றால் செய்தேன். இதற்கு முன்பு எதிரியிடம் வரவு செலவு வைத்திருந்தேனா என்றால் அவ்வப்போது சிறு சிறு தொகைகளை எதிரி என்னிடம் பெற்றுக் கொண்டு அதனை திரும்ப கொடுத்து விடுவார். மேற்படி வரவு செலவு வைத்திருந்ததற்கு பதிவேடுகள் எதுவும் வைத்துள்ளேனா என்றால் இல்லை.

2. எனக்கு பஷீர் மற்றும் ஸ்ரீதர் என்ற நண்பர்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி பஷீரும் எதிரியும் ஒன்றாக துணிக்கடையில் வேலை செய்தார்கள் என்றால் துணி குடோனில் வேலை செய்தார்கள். எதிரி என்னிடம் பணம் வாங்கியதாக சொல்லும் சமயத்தில் என்னுடைய வீட்டில் யார் யார் இருந்தார்கள் என்றால் நான் மட்டும்தான் இருந்தேன். கடந்த இரண்டு ஆண்டுகளாக எதிரி வசித்து வரும் முகவரி

தெரியுமா என்றால் தெரியும் கருங்கல்பாளையம் ஈரோட்டில் வசித்து வருகிறார் கதவு எண் தற்போது ஞாபகம் இல்லை பார்த்தால் தான் தெரியும்.

3. ஈரோடு சாஸ்திரி நகரைச் சேர்ந்த இருதயராஜ் என்பவர் என்னுடைய கடையில் வேலை செய்து வந்தார் என்றால் சரிதான். அவர் கொரோனா தொற்று நோய் காலத்திற்குப் பின்பு வேலையை விட்டு நின்று விட்டார் என்றால் சரிதான் அவர் தனியாக வேலை செய்து வருகிறார். தற்போது அவரிடம் பேச்சுவார்த்தை உள்ளதா என்றால் பேச்சுவார்த்தை இல்லை ஒரு முறை நீதிமன்றத்தில் பார்த்தேன். கடந்த இரண்டு வருடங்களாக எதிரி போர் மோட்டார் இறக்கி ஏற்றும் கூலி வேலைக்கு சென்று வருகிறார் என்றால் நான் அவருடன் கடந்த இரண்டு வருடமாக பேசவில்லை என்பதால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

4. நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் தொகையை அன்றைய தினம் நான் வைத்திருந்தேன் என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வருமான வரி தாக்கல் செய்கிறேன் என்றால் தாக்கல் செய்கிறேன். மேற்படி எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் தொகையை வருமான வரி கணக்கில் காண்பித்துள்ளேனா என்றால் இல்லை. அதற்கு குறிப்பிட்ட காரணம் உள்ளதா என்றால் இல்லை. நான் உண்மையாக எதிரிக்கு பணம் கொடுத்திருந்தால் அதை வருமான வரி கணக்கில் காண்பித்திருப்பேன் என்றும், நான் தொகை எதுவும் கொடுக்கவில்லை என்பதால் தான் அதை வருமான வரி கணக்கில் காண்பிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

5. மேற்படி பஷீர் வியாபார ரீதியாக எதிரிக்கு பணம் கொடுக்க வேண்டி இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு தெரியும் என்றும், அதனால் இருவருக்கும் மனக்கசப்பு ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி மனக்கசப்பு காரணமாக எதிரியின் கையொப்பம் செய்திருந்த மற்ற விவரங்கள் பூர்த்தி செய்யப்படாத வெற்று காசோலையை எதிரிடமிருந்து பஷீர் எடுத்து வந்து அதை எனது நண்பர் ஸ்ரீதரிடம் கொடுத்து அதை அவர் என்னிடம் கொடுத்து நான் அதை

மோசடியாக தயார் செய்து எதிரி மீது இந்த பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. மேற்படி தொகைக்கு செக்யூரிட்டியாக புரோநோட் போன்ற ஆவணங்களை ஏன் பெறவில்லை என்றால் நட்பின் அடிப்படையில் கொடுத்ததால் அவ்வாறு ஆவணங்கள் எதுவும் பெறவில்லை. எதிரிக்கு அசையா சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் இருந்தது தற்போது அதை விற்பனை செய்து விட்டார். மேற்படி சொத்து என்னவென்றால் கருங்கல்பாளையத்தில் இருந்த வீடாகும். எதிரிக்கு நான் சொல்வது போல் வீடு எதுவும் இல்லை என்றும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

7. பஷீர் ஒவ்வொரு வாய்தாவிற்கும் நீதிமன்றத்திற்கு என்னுடன் வருகிறார் என்றால் வருகிறார் ஆனால் என்னுடன் வரவில்லை. இன்றும் பஷீர் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் ஆமாம். ஒவ்வொரு முறையும் நீதிமன்றம் வரும்போதும் பஷீருடன் நான் பேசுகிறேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரி என்னிடம் எந்தத் தொகையும் வாங்கவில்லை என்றும், பஷீர் கேட்டுக் கொண்டதற்காக நான் பொய் வழக்கு தக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஜானகி அம்மன் லே-அவுட் என்ற முகவரிக்கு தான் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எதிரியின் முகவரி ஜானகி அம்மாள் லேஅவுட் என்றால் எதிரி கொடுத்த முகவரிக்கு தான் அறிவிப்பு அனுப்பினேன். எத்தனை வருடங்களாக எதிரியை எனக்கு தெரியும் என்று என்னுடைய அறிவிப்பிலும், புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU
Digitally signed by S R BABU
Date: 2026.02.17 17:22:18 -0800

Judicial Magistrate No.III,

Erode